## உண்மையை உரைத்திடு!



பொது வாழ்வு புனிதமான பூமி. அந்தத் தியாக பூமியில் உலவுபவர்கள், புகழுக்காகப் புளுகு மொழி பேசும் புலவர்களாக இருக்கக் கூடாது. ஊர் முழுதும் எதிர்த்தாலும், உண்மையையே உரைத்திடும் அஞ்சா நெஞ்சர்களாக இருக்க வேண்டும்; ஆற்றல் வீரர்களாகத் திகழ வேண்டும்.

- அண்ணா

## அண்ணா சொன்ன அரசியல் பாடம்!



Dear Brother, Go to the people ; Live with them, Learn from them, Love them, Serve them, Plan with them, Start with what they have.

மக்களிடம் செல், அவர்களோடு வாழ், அவர்களிடம் கற்றுக் கொள், அவர்களை நேசி, அவர்களுக்குச் சேவை செய், அவர்களோடு திட்டமிடு, அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து தொடங்கு, அவர்களிடம் இருப்பதைக் கொண்டு கட்டி எழுப்பு !

- அண்ணா

# தி.மு.க. முப்பெரும் விழா வரலாறு!





**1949**ஆம் ஆண்டு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் செப்டம்பர் 17ஆம் தேதி "திராவிட முன்னேற்றக் கழகம்" எனும் நமது இயக்கம் துவக்கப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்களே துவங்குகிறபோது 'இந்த இயக்கம் எப்படிப்பட்ட வளர்ச்சி அடைய வேண்டும்; இதன் நோக்கம் என்ன?' என்பதை எல்லாம் தெளிவுபடுத்தி, அதற்குகுரிய பல்வேறு விதமான முடிவுகளை எடுத்து அதற்குரிய குழுக்களை எல்லாம் அமைத்து தி.மு.கழகத்தை துவக்கினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அப்போது அறிஞர் அண்ணா வயது 40; நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞருக்கு வயது 25; பேராசிரியருக்கு வயது 27; ஆக 30 வயதுக்கு குறைவாக இருந்தவர்களை எல்லாம் முன்னணித் தலைவர்களாகக் கொண்டு துவக்கப்பட்ட இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம். அறிஞர் அண்ணா அவர்கள் இளைஞர் பட்டாளத்தோடு துவக்கப்பட்ட இந்த இயக்கத்தை பட்டித்தொட்டி முதல் பட்டணக்கரை வரை என அனைத்துப் பகுதிக்கும் கழகத் தோழர்களோடு சென்று, அவருடைய பிரச்சாரத்தின் மூலமாக படிப்படியாக வளர்த்த இயக்கம் தான் இன்றைக்கு பவள விழா காணுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம். நம் இயக்கத்தினுடைய வரலாற்றை, கழக பவள விழா ஆண்டின் முப்பெரும் விழா கொண்டாடுகிற இந்நேரத்தில் நாம் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்பது ஒவ்வொரு கழகத்தினருடைய கடமையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஏதோ இந்த இயக்கம் 'நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் அல்ல'. முழுக்க முழுக்க இளைஞர்களைக் கொண்டு - இளைஞர்களையே கொண்ட ஒரு இயக்கமாக உருவாக்கப்பட்ட இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

கழகம் தோன்றிய போது அறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரை விட்டுப் பிரிந்து வந்திருந்தாலும், பெரியாரைப் பற்றி ஒரு வார்த்தை கூட விமர்சனம் செய்யாமல், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தலைவர் இல்லை அந்த தலைவர் நாற்காலி காலியாக இருக்கும். தந்தை பெரியார் என்றைக்கு விரும்புகிறாரோ அன்றைக்கு அவர் வந்து அந்தத் தலைவர் நாற்காலியில் அமரலாம். அதுவரை தலைவர் பொறுப்பு இல்லை, பொதுச்செயலாளர் பொறுப்புதான் என்ற அந்தத் உயர்ந்த எண்ணத்துடன் சித்தாந்த அடிப்படையில் தி.மு.க. தோன்றிய போது இந்தக் கட்சிக்கு தலைவர் இல்லை பொதுச்செயலாளர் - பொருளாளர் ஆகிய பொறுப்புகளுடன் மட்டுமே இருந்த இரு அமைப்போடு இந்த இயக்கம் துவக்கப்பட்டது.

அன்று முதல் இந்த இயக்கத்தை அறிஞர் அண்ணா அவர்கள் அணு அணுவாகவும் - ஒவ்வொரு படியிலும், கவனமாக ஒவ்வொரு படிப்படியாக உயர்த்திய காரணத்தால், மாபெரும் எழுச்சியுடன் எந்த ஒரு அரசியல் இயக்கமும் பெற முடியாத வளர்ச்சியை திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றது, பெற்று வருகிறது, பெறும்.

1949 இல் துவக்கப்பட்ட தி.மு.கழகம் பதினெட்டு ஆண்டு காலத்திற்குள்ளாக ஆட்சியை கைப்பற்றுகிற இயக்கமாக ஆவதற்கு காரணம் பேரறிஞர் அண்ணா காட்டிய அந்தப் பாதையும், அவரோடு இருந்த தளகர்த்தர்களும்தான்! குறிப்பாக நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞரைப் போன்ற தலைவர்களால்தான் இந்த இயக்கம் வளர்ந்தது என்பது வரலாற்று உண்மை.

1949 இல் இருந்து 1957 வரை கழகம் ஒரு அரசியல் கட்சியாக இயங்காமல், முழுக்க முழுக்க பகுத்தறிவுக் கொள்கையையும் - பெரியாருடைய சிந்தனையை மட்டுமே பரப்பும் இயக்கமாக இருந்ததை, கழகத் தோழர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப 1957-இல் அரசியல் இயக்கமாக தோன்றியது தி.மு.க.

1957-ல் நடைபெற்ற தேர்தலில் முதன்முதலாக தி.மு.க. தேர்தல் களத்திலே இறங்கி, அந்த முதல் தேர்தலிலேயே 15 இடங்களில் வெற்றி பெற்று இரண்டு நாடாளுமன்ற இடங்களிலும் வெற்றி பெற்ற ஒரு இயக்கமாக தி.மு.க. உருவானதை அன்றைய அரசியலியல் இருந்த அத்தனை பேருடைய கண்களை உறுத்தக்கூடிய வகையில் அமைந்தது. அதுவரையில் பார்வையற்று பலருடைய பார்வையிலே படாமல் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்தினுடைய கவனத்தையும் பார்வையையும் ஈர்க்கக்கூடிய ஒரு இயக்கமாக உருவானது.

1957ல் இருந்து 1962 வரை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் கலைஞர், பேராசிரியர் போன்றவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய பணிகளால்தான் 1952இல் 15 உறுப்பினர்களாக இருந்தது, 1962லே 50 ஆக உயரக்கூடிய ஒரு நிலை பெற்றது. இரண்டு இடங்களில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், எட்டு இடங்களைப் பெறக்கூடிய நிலை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்டது. அதனை தொடர்ந்து 1962லிருந்து படிப்படியாக தமிழ்நாட்டு மக்கள் மனங்களை வென்று, அவர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த காரணத்தால் 1967ல் முதன்முதலாக கழக ஆட்சி அமைந்தது.

ஆக இப்படி படிப்படியாக வளர்ந்த இயக்கம் - பல்வேறு சோதனைகளையும் பல்வேறு நெருக்கடிகளையும் சந்தித்து வளர்ந்த இந்த மாபெரும் இயக்கம் - பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட இந்த இயக்கம் - 1969ல் அண்ணா மறைவுக்குப் பிறகு கழகத்தினுடைய ஒரு தலைமை பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஒற்றை தலைவர் கலைஞர் அவர்கள், தலைவர் பதவி தனக்கு வேண்டாம் என்று அண்ணா அவர்கள் சொன்ன பதவிக்கு, தந்தை பெரியாருடைய விருப்பத்திற்கு ஏற்ப தலைவர் பதவி உருவாக்கப்பட்டு, அந்தத் தலைவர் பதவியிலே அமர்த்தப்பட்டவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர்.

அன்று தொட்டு தலைவர் கலைஞர் அவர்கள் இந்த இயக்கத்தை தலைமை தாங்கி 1974-ல் முதல் முதலில் கழகத்தினுடைய வெள்ளி விழாவை அன்றைக்கு முதலமைச்சராக இருந்து - கழகத்தினுடைய தலைவராகப் பொறுப்பு வகித்து, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் பெரியார், அண்ணா, கழகம் தோன்றிய விழாவாக நடத்தப்பட்டது.

1974ல்தான் முதன்முதலில் தலைவர் கலைஞர் அவர்களின் "முப்பெரும் விழா" என்ற தலைப்பில் இந்த இயக்கத்தினுடைய வெள்ளிவிழா ஆண்டில் சென்னை கடற்கரையிலே நடைபெற்று, இராயபுரம் அறிவகத்தில் இருந்து துவக்கப்பட்ட பேரணி, ஒருங்கிணைந்த அன்றைய மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சீத்தாபதி அவர்கள் தலைமையில் பிரம்மாண்டமான ஒரு பேரணியாக அமைந்து சென்னையையே உலுக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இராயபுரத்தில் துவங்கிய ஊர்வலம் மெரினா கடற்கரை வந்து அடைந்து அந்தக் கடற்கரை கூட்டத்தில் தான் 1974ல் முதன்முதலில் "முப்பெரும் விழா" என்ற தலைப்போடு நடைபெற்றது.

கழகத்தினுடைய வெள்ளி விழா ஆண்டான 1974-ல் முப்பெரும் விழா கொண்டாடிய நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பிலிருந்தது. அதற்குப் பின்னால் 1999-ஆம் ஆண்டு கழகத்தினுடைய பொன்விழா ஆண்டு முப்பெரும் விழா சென்னையிலே அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கழகத்தின் சோதனைகளையெல்லாம் சாதனைகளாக மாற்றிக் காட்டியவர் தான் அன்றைய தலைவர் கலைஞர், என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிற தலைவர் கலைஞர் அவர்கள், எமர்ஜென்சி நேரத்தில் அகில இந்தியாவில் இருந்த பல கட்சிகள் காணாமல் போய்விட்டது. பல கட்சிகள் தங்களுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு கட்சியை கலைத்து விட்டார்கள். சுதந்திரக் கட்சி ஒரு காலத்தில் குஜராத்தையும் ஒரிசாவையும் ஆளுகின்ற கட்சியாக - இரண்டு மாநிலங்களில் ஆளுங்கட்சியாக இருந்த சுதந்திரா கட்சி அந்தக் காலகட்டத்தில் கலைக்கப்பட்டது. ஒரு காலத்தில் கேரளாவை ஆண்ட பிரஜா பி.எஸ்.பி. கட்சி அந்த கட்சி கலைக்கப்பட்டது. இவ்வளவு ஏன் ஜனதா கட்சியை ஜன சங்கம் என்று, இன்றைய பி.ஜே.பி. என்று சொல்லப்படுகிற அன்றைய ஜன சங்கமும் அந்த காலத்தில் கலைக்கப்பட்டது. இவ்வளவு ஏன் தமிழ்நாட்டிலே அ.தி.மு.க. என்று துவக்கப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரோடு எம்.ஜி.ஆர். தொடங்கிய கட்சிகூட, அன்றைக்கு இருந்த நிலவரத்தை எண்ணி - அன்றைக்கு இருந்த அரசியல் நெருக்கடியை கண்டு பயந்து அண்ணா தி.மு.க. என்ற பெயரை மாற்றிக் கொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் மாற்றிக் கொண்டார்கள்.



**ஆர்.எஸ்.பாரதி**
அமைப்புச் செயலாளர், தி.மு.க.

இந்த காலகட்டத்தில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயரையும் மாற்ற வேண்டும் என்று அன்றைக்கு கழகத்திலிருந்த சிலர் கழகத்தில் இருந்த மூத்த தலைவர், குறிப்பாக டெல்லிக்குச் சென்று இந்திரா காந்தி அம்மையாரை சந்தித்து விட்டு வந்த ராஜாராம் போன்றவர்கள் "இனிமேல் மாநில கட்சியிலேயே இருக்கக் கூடாது என்ற நிலை வந்தாலும் வரலாம்" என்று சொன்ன நேரத்தில், பலரும் தி.மு.க.வினுடைய பெயரை மாற்ற வேண்டும் என்று கலைஞருக்கு பக்கத்தில் இருந்த மூத்த தலைவர்கள் சொன்ன போதுகூட, தன்னுடைய மகன் மு.க ஸ்டாலின், மருமகன் முரசொலிமாறன் இந்த இரண்டு பேரும் மிசா கைதிகளாக இருக்கிறார்கள். ஒரே குடும்பத்தில் இரண்டு பேர் சிறையில் இருக்கிறார்கள். மற்ற தலைவர்கள் யாருடைய வீட்டிலும் இருப்பவரும் மிசாவில் கைது செய்யப்படவில்லை. ஆனால், தன்னுடைய குடும்பத்தைச் சார்ந்த மகனும், மருமகனும் இரண்டு பேர் சிறையில் இருந்துகூட கழகத்தின் பெயரை மாற்றக்கூடாது என்று பிடிவாதமாக உறுதியாக நின்று காப்பாற்றியவர் தலைவர் கலைஞர்.

அன்று தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்த நிலைப்பாடுதான், இன்றைக்கும் "தி.மு.க." என்ற பெயரோடு இந்தப் பவள விழா ஆண்டிலே உறுதியோடு கழகத் தோழர்கள் கருப்பு சிவப்புக் கொடிகளோடு நிற்கிறார்கள் என்று சொன்னால், இந்தக் கருப்பு சிவப்பு உருவாவதற்குக் காரணமான திராவிடர் கழகத்தில் இருந்த கலைஞர், அன்றைக்குத் திராவிடர் கழகக் கொடி உருவாவதற்கு கலைஞருடைய ரத்தம் பயன்பட்டதோ, அதே கலைஞருடைய குரலும், அவருடைய உறுதியான நிலைப்பாட்டாலும்தான், இன்றைக்குக் கருப்பு - சிவப்புக் கொடி ஒவ்வொரு கழகத் தோழர்களுடைய கைகளிலும் இருப்பதற்குக் காரணமாக இருந்தது.

1974ஆம் ஆண்டு, கழக வெள்ளி விழா ஆண்டு. அன்றிலிருந்து தொடர்ந்து இவ்வியக்கம் முப்பெரும் விழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறது. 1985ஆம் ஆண்டில், தலைவர் கலைஞர் அவர்கள், இம்முப்பெரும் விழாவிற்கு முத்தாய்ப்பு வைப்பதைப் போல, மூன்று விருதுகளை அறிமுகப்படுத்தினார். 1985ஆம் ஆண்டில், மூன்று விருதுகளோடு பெரியார்- அண்ணா - கலைஞர் என்ற விருதுகளோடு நடைபெற்று வந்த முப்பெரும் விழா - 2000 ஆம் ஆண்டில் பெரியார் - அண்ணா - கலைஞர் விருதையும் சேர்த்து, பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் திராவிட இயக்கத்திற்குச் செய்தவற்றைப் பெருமைப்படுத்தும் வகையில், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் விருதையும் அறிமுகப்படுத்தினார்.

அந்த விருதுகள் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

1999 ஆம் ஆண்டு, கழகத்தினுடைய பொன்விழா ஆண்டு - அந்தப் பொன்விழாவின்போது, தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். ஆக, வெள்ளி விழாவின்போதும், தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தார் - கழகம் ஆட்சியில் இருந்தது. பொன்விழா ஆண்டிலும் கழகம் ஆட்சியில் இருந்தது.

அதற்குப் பிறகு, 2018ஆம் ஆண்டு வரையில் விருதுகள் வழங்கப்பட்டு வந்தன. 2018 ஆம் ஆண்டில் தளபதி அவர்கள் கழகத் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, பெரியார் - அண்ணா - கலைஞர் - பாவேந்தர் பாரதிதாசன் விருதுகளோடு நின்றுவிடாமல், கலைஞரின் உற்ற நண்பராகவும், கழகத்தைக் கட்டிக் காப்பாற்றுவதற்கு உறுதுணையாக கலைஞரோடு இறுதிநாள் வரை இருந்த இணையர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இருந்த பேராசிரியர் பெயரில் முப்பெரும் விழாவில் அவர் பெயரில் விருதினை அறிவித்தார் தலைவர் தளபதி அவர்கள்.

அதுமட்டுமல்லாமல், அகில இந்திய அளவில், மிகப்பெரிய கட்சியாக, நாடாளுமன்றத் தேர்தலில் 40-க்கு 40 இடங்களிலும் வெற்றி பெற்றது. நாடாளுமன்றத் தேர்தலில் 100-க்கு 100 சதவிகிதம் வெற்றி பெற்ற ஓர் இயக்கத்தினுடைய தலைவர் தளபதி அவர்கள். பவள விழா கொண்டாடுகின்ற இந்தக் காலகட்டத்தில், முப்பெரும் விழா நடைபெறவிருக்கிறது.

பொன் விழா கொண்டாட்டம் அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. கழகத்தின் பவள விழாவை தென்சென்னையில் இருக்கின்ற நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறவிருக்கிறது. ஆக, இந்தப் பவளவிழாவினுடைய 75 ஆண்டு கால வரலாற்றை, எளிமையாகச் சொல்லவேண்டுமானால், 1974, 1999, 2024 ஆகிய இந்த மூன்றாண்டுகள், தி.மு.க.வினுடைய வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆண்டுகளாகும்.

வெள்ளி விழா, பொன்விழா, பவள விழா ஆண்டுகளில் ஆட்சியில் இருந்திருக்கின்றோம். தொடர்ந்து இவ்வியக்கம் நூறாவது ஆண்டினை கொண்டாடுகின்ற பொழுதும் ஆட்சியில் இருக்கும்; இருக்கவேண்டும். இருப்பதற்குரிய பணிகளில் நாம் அயராது ஈடுபடவேண்டும்.

பவள விழா கொண்டாடுகின்ற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பில் இருக்கின்ற தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், கழகம் வெள்ளி விழா கொண்டாடுகின்ற நேரத்தில், 1974ஆம் ஆண்டில், முதன்முதலில், பொதுக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழு உறுப்பினராக இருந்தார். பொன்விழா கொண்டாடுகின்றபொழுது, கழகத்தினுடைய இளைஞரணி செயலாளராகவும், சென்னை மாநகரத்தினுடைய மேயராகவும் இருந்தார்.

இப்பொழுது, கழகம் பவள விழா காணுகின்ற நேரத்தில், கழகத்தின் தலைவராகவும், தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும், நம்முடைய ஒப்பற்ற தலைவர் தளபதி திகழ்கிறார். ஆக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆயிரங்காலத்துப் பயிர் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றார். இந்தியாவிலேயே ஒரு மாநிலக் கட்சி, 75 ஆண்டு காலம் தங்கு தடையின்றி நடைபோட்டு, வெள்ளி விழாவின்போதும், பொன்விழாவின் போதும், பவள விழாவின்போதும் ஆட்சியில் இருக்கிறது. இச்சிறப்பு தி.மு.க.வை தவிர, தமிழ்நாட்டில் வேறு எந்த அரசியல் கட்சிக்கும் இருந்ததாக வரலாறு இல்லை. அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழா, பவள விழா வருகின்ற 17ஆம் தேதி நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறவிருக்கிறது. இந்த விழாவில், நாம் அனைவரும் உற்சாகத்துடன் பங்கேற்கவேண்டும். பெரியார் - அண்ணா - கலைஞர் - பாவேந்தர் - பேராசிரியர் விருதுகளோடு, தந்தை பெரியார் வழியில், அண்ணா வழியில், கலைஞர் வழியில், பேராசிரியர் காட்டிய அறவழியில், இந்த இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய இன்றைய தலைவர் நம்முடைய தளபதி மு.க.ஸ்டாலின் பெயரிலும், இந்த ஆண்டு முதல் "மு.க.ஸ்டாலின் விருது"ம் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த கழகத்தின் பவள விழாவில் அனைவரும் கலந்து கொண்டு, வெள்ளி விழா ஆண்டிலும், பொன்விழா ஆண்டிலும், பவள விழா ஆண்டிலும் கலந்துகொள்கின்ற வாய்ப்பை நான் பெற்றவன் என்ற முறையில் பெருமையடைகிறேன்.

கழக வெள்ளிவிழா ஆண்டில் மாவட்டப் பிரதிநிதி பொறுப்பில் இருந்தேன்; பொன்விழா ஆண்டில், சட்டத் துறை செயலாளராக இருந்தேன்; பவள விழா ஆண்டில், அமைப்புச் செயலாளராக இருக்கிறேன். ஆக, என்னைப் போலவே, இந்த இயக்கத்தில், வெள்ளி விழா, பொன்விழா, பவள விழா காணுகின்ற இலட்சத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் இருக்கின்றனர். அவர்கள், 'ஒரே கொடி, ஒரே கட்சி' என்ற கொள்கை உறுதியோடு இருக்கக்கூடியவர்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இலட்சிய நோக்குடன் இவ்விழாவில் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

அறிவு, துணிவு கொண்ட நம் தி.மு.க. இயக்கத்தின் வழி நின்று என்றும் நீங்கள் செயல்படவேண்டும் என்று கழகத் தோழர்களையும் - இளைஞர்களையும் கேட்டுக் கொள்வதோடு;

திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75 ஆம் ஆண்டு பவளவிழா - முப்பெரும் விழாவினைக் கொண்டாடும் வரலாற்றுச் சிறப்புமிக்க காலத்தில், கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சியில் அமரவைத்து - இந்தியாவே பாராட்டிப் போற்றி வரும் 'திராவிட மாடல்' ஆட்சியை நடத்திவரும் கழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அணிவகுத்து, அவரது கரத்தை வலுப்படுத்துவோம் என்று சூளுரை மேற்கொள்வோம்.